FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை- 2015
## Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | கர்நாடக சங்கீதம் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி - I

❖ சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளடியிடுக.

01) தாலாட்டுப் பாடல்களும் ஊஞ்சல் பாடல்களும் பாடப்படும் இராகம்
1) கமாஸ் 2) ஆனந்த பைரவி 3) ஹரிகாம்போதி
4) ஸ்ரீரஞ்சனி 5) மோகனம்

02) இராகத்திலோ சங்கதியிலோ வரக்கூடிய முடிவு ஸ்வரம்
1) அம்சம் 2) தாரம் 3) நியாசம்
4) க்ரகம் 5) மந்தரம்

03) மாது சம்பந்தமான அணி அல்லாதது
1) மணிப்பிரவாளம் 2) சங்கதி 3) யமகம்
3) மத்திமகால சாகித்தியம் 5) ஸ்வராட்சரம்

04) அவரோகணம் மட்டும் வக்கிரமாயுள்ள இராகம்
1) ஆனந்தபைரவி 2) ஸ்ரீராகம் 3) ஸகானா
4) கமாஸ் 5) நீலாம்பரி

05) த்வி அன்னியஸ்வர பாஷாங்க ராகத்திற்கு ஓர் உதாரணம்
1) பிலகரி 2) ஹிந்துஸ்தான் காபி 3) காம்போதி
4) அடானா 5) பைரவி

06) A - ஒரே இடத்தில் வைத்து வாசிக்கப்படுவது
B - சுருதி நிர்ணயிக்கப்பட்டது
C - 700 வகையான இசைக் கருவிகளின் ஒலிகளை எழுப்பக்கூடியது
D - சுருதிக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவது
E - ஆர்மோனியம் என்ற இசைக்கருவியின் பிற்கால வளர்ச்சி
மேலுள்ள கூற்றுக்களில் பியானோ இசைக் கருவிக்குப் பொருத்தமானது
1) A B C 2) B C D 3) A C E
4) C E B 5) A C D

07) நாயக - நாயகி சகி பாவம் நிறைந்த உருப்படி யாது?
1) ஜதீஸ்வரம் 2) பதம் 3) வர்ணம்
4) திருப்புகழ் 5) கீதம்

08) தாளத் தந்திகளுடன் அமைந்த வாத்தியம்
1) புல்லாங்குழல் 2) தம்புரா 3) வீணை
4) கடம் 5) மிருதங்கம்

09) ஒரு இராகத்தை பாடும் போது இடை இடையே முடியும் ஸ்வரம்
1) பகுத்துவம் 2) க்ரகம் 3) மந்தரம்

4) அபன்னியாசம் 5) வின்னியாசம்

10) தத வாத்தியங்களாவன
1) தம்புரா, வீணை 2) தவில், மிருதங்கம் 3) கடம், தவில்
4) புல்லாங்குழல், வயலின் 5) ஜலதரங்கம், கடம்

11) காம்போதி இராகத்தின் பண்
1) முல்லை 2) பூப் 3) தக்கேசி
4) குறிஞ்சி 5) செவ்வழி

12) "வலசி" எனத் தொடங்கும் இராகமாலிகை
1) கேதாரம் 2) கல்யாணி 3) சங்கராபரணம்
4) மோகனம் 5) ஸ்ரீராகம்

13) A - ஸகானா இராகத்தை $1\frac{1}{2}$ மணி நேரம் பாடியவர்
B - வாசுதேவ என்ற முத்திரையை உடையவர்
C - சங்கீத கலா கோவிந்த, ஸரச கான சிரோன்மணி என்ற பட்டங்களைப் பெற்றவர்
D - 1959 ஆம் ஆண்டு ஜனாதிபதியினால் பத்மபூஷன் விருது பெற்றவர்
மேற்படி கூற்றுக்களுக்குப் பொருத்தமானவர்
1) மைசூர் சௌடையா 2) மைசூர் வாசுதேவாச்சாரியார்
3) பாலக்காடு மணி ஐயர் 4) பைடாலகுருமூர்த்தி சாஸ்திரிகள்
5) இராமாணுஜ ஐயங்கார்

14) மியான் - கிதேஸ், மியான்கி மல்ஷார் போன்ற புதிய இராகங்களை அறிமுகப்படுத்தியவர்
1) பத்கண்டே 2) மொனிட் 3) அமிர்குங்கு
4) தான்சேன் 5) பீதோவன்

15) விவாதி மேளங்களின் எண்ணிக்கை
1) 32 2) 40 3) 72
4) 36 5) 46

16) இராகத்தின் இலட்சணத்தைக் கூறும் உருப்படி
1) லட்சண கீதம் 2) வர்ணம் 3) தில்லானா
4) பதம் 5) தேவாரம்

17) தேவக்கிரியா என அழைக்கப்படும் இராகம்
1) ஆபோகி 2) மலகரி 3) சுத்தசாவேரி
4) காம்போதி 5) கரகரப்பிரியா

18) ஆபோகி இராகத்தில் விலக்கப்பட்ட ஸ்வரங்கள்
1) ப, நி 2) ம, த 3) நி, ஸ்
4) ரி, க 5) க, ப

19) A - 28 வது மேளத்தின் ஜன்னியம்
B - வக்ர ஷாடவ சம்பூர்ண இராகம்
C - பஞ்ச சாமரம் என்ற வர்ணமெட்டு அமைந்துள்ள இராகம்
D - பாஷாங்க இராகம்
மேற்படி கூற்றுகளுக்குப் பொருத்தமான இராகம்
1) ஸ்ரீரஞ்சனி 2) பேகட 3) கமாஸ்
4) ஆபோகி 5) சுத்தசாவேரி

20) ஓர் உருப்படிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வரும் அணி
1) யமகம் 2) ஸங்கதி 3) சொற்கட்டு சாகித்தியம்

4) மணிப்பிரவாளம் 5) ஸ்வரசாகித்தியம்

21) திருப்புகழை அருளியவர்
1) சம்பந்தர் 2) வீரமணி 3) அருணகிரிநாதர்
4) பொன்னையாபிள்ளை 5) வேதநாயகம்பிள்ளை

22) ஸகமதநிஸ் - ஸ்நிதமகஸ என்ற ஆரோகண - அவரோகணத்தை உடைய இராகம்
1) சுத்த தன்யாசி 2) கிந்தோளம் 3) சாவேரி
4) ஆபோகி 5) பிலகரி

23) "ரிஷ்ய சிருங்கர்", "இது நிஜமா" என்ற திரைப்படங்களில் நடித்த வீணைக் கலைஞர்
1) பாலச்சந்தர் 2) தனம்பாள் 3) சிட்டிபாபு
4) காயத்திரி 5) லால்குடி ஜெயராமன்

24) சங்கராபரணத்தினுடைய பண்
1) பழம்தக்கராகம் 2) பழம் பஞ்சுரம் 3) சீகாமரம்
4) முல்லை 5) செந்துருத்தி

25) நாட்டிய நிகழ்வில் 7 வது இடத்தையும் இசைக் கச்சேரியில் இறுதியிடத்தினையும் பெறும் உருப்படி
1) பதம் 2) வர்ணம் 3) கீர்த்தனை
4) தில்லானா 5) ஜாவளி

## பகுதி - II

❖ **விரும்பிய இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01)
i) ஜன்னிய இராகப் பிரிவுகள் எத்தனை? (3 புள்ளிகள்)
ii) ஸ்வராந்தரம் என்றால் என்ன? (6 புள்ளிகள்)
iii) ஜன்னிய இராகப் பிரிவுகளை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

02) பின்வரும் இராங்களுள் இரண்டிற்கு இலட்சணம் தருக.
i) ஆனந்த பைரவி ii) கமாஸ் iii) ஸ்ரீரஞ்சனி iv) ஆபோகி
(7½ x 2 = 15 புள்ளிகள்)

03)
i) கிருதியை அலங்கரிக்கும் அணிகள் எவை? (6 புள்ளிகள்)
ii) அவற்றுள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி - III

➢ **விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

01)
i) 24 மெட்டுக்களை உடைய வாத்தியம் யாது? (2 புள்ளிகள்)
ii) அதன் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)
iii) சுதி சேர்க்கும் முறை, அமைப்பு, வாசிக்கும் முறை என்பவற்றினை எழுதுக. (7 புள்ளிகள்)

02)
i) இசைக் கருவிகளின் பிரதான பிரிவுகள் எவை? (2 புள்ளிகள்)
ii) இதர பிரிவுகள் எட்டினையும் தருக. (8 புள்ளிகள்)
iii) அவற்றுள் ஐந்தினை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

03) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு விரிவான இலட்சணம் தருக.
i) இலட்சண கீதம் ii) தில்லானா iii) ஜாவளி iv) பதம்
(7½ x 2 = 15 புள்ளிகள்)

04)
i) ஹிந்துஸ்தானிய வாக்கேயகாரர் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)
ii) அவர்களுள் ஒருவரின் இசைத்தொண்டு, வாழ்க்கை வரலாறு என்பவற்றை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education